Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

01.01.2021 வெள்ளிக்கிழமை

## கொள்ளை கும்பலை மடக்கிய ஊரவர்கள்!!

*விடத்தற்பளையில் சம்பவம்*

*கொடிகாமம், ஜன. 1*

*கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விடத்தற்பளையில் கொள்ளையில் ஈடுபட முயற்சித்தனர் எனச் சந்தேகிக்கப்படும் கும்பலைச் சேர்ந்த ஒருவரை ஊரவர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர். இருப்பினும் அந்தக் குழுவின் 4பேர் ஊரவர்களில் ஒருவரைக் காயப்படுத்தி விட்டுத் தப்பியோடியுள்ள*

9

## தோழர் மணியுடன் வந்த காடையர்கள் அநாகரிகம்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் சுகாஸ் பாய்ச்சல்



*யாழ்ப்பாணம், ஜன. 1*

*நல்லூர் பிரதேச சபையில் தவிசாளர் தெரிவு முடிந்த பின்னர் எமது கட்சியைச் சேர்ந்த பெண் உறுப்பினர்களைப் பார்த்து*

2




## ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி முழுமையாக வெற்றி!

### புத்தாண்டு தினத்தில் அறிவித்தது பிரிட்டன்

**பிரிட்டன், ஜனவரி 1**

**கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக பிரிட்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் தடுப்பூசி முழுமையாக வெற்றிபெற்றுள்ளது என்று இன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதை மக்களுக்கு வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.**

2

## கோமாளித்தனமாக கதைக்கிறார் சுகாஸ்

### மணிவண்ணன் சீண்டல்



*யாழ்ப்பாணம், ஜன. 1*

*நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு அமர்வின் போது, தங்க ளுடன் (மணிவண்ணனுடன்) மது போதையில் வந்த காடையர் கூட்டம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பெண் உறுப்பினர்களுடன் அநாகரிகமாக நடந்து கொண்டதாக சட்டத்தரணி க.*

2


## படுகொலை, போர்க்குற்றங்களில் இராணுவம் ஈடுபடவே இல்லை!!

### மீண்டும் புராணம் பாடத் தொடங்குகின்றது அரசு

*கொழும்பு, ஜன. 1*

*இலங்கை இராணுவம் படுகொலைகளில் ஈடுபடவில்லை. போர்க் குற்றங்களும் இழைக்கவில்லை. எனவே, எதற்கும் அஞ்சமாட்டோம். இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலர் மேஜர் கமல் குணரத்ன சூளுரைத்தார். இராணுவத்தினருக்கு எதிராக அடுத்துவரும் காலப்பகுதியில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படலாம். இதற்கு சில அரசியல் கட்சிக*

2



## விரைவில் கல்வித்துறைக்குள்ளும் பாதுகாப்புத் தரப்பு

### *வவுனியாவிலேயே இது ஆரம்பம்*

*கொழும்பு, ஜன. 1*

*ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளில் விமானப்படையினரை ஈடுபடுத்த முடியும் என்று விமானப்*

2

## மாவட்டங்கள் தோறும் கொரோனா ஒருங்கிணைப்பும் இராணுவத்திடம் ஒப்படைப்பு

*கொழும்பு, ஜன. 1*

*நாடு முழுவதும் கொரோனா கட்டுப்பாட்டுப் பணிகளின் அவசரத் தேவையை கருத்தில் கொண்டு கொரோனா கட்டுப்பாட்டு தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் பரிந்துரைக்கு அமைவாக, ஜனாதிபதி செயலகம் இன்று முதல் அனைத்து மாவட்டங்களுக்கும் 25 மூத்த இராணுவ அதிகாரிகளை ஒருங்கிணைப்பாளர்களாக நியமித்துள்ளது. பதவி உயர்வு பெற்ற பின்னர் இராணுவத் தலைமையகத்தில் சவேந்திர சில்வா கௌரவிக்கப்பட்ட தினத்தில் இந்தப் புதிய பொறுப்புக்களை அவர் வழங்கினார். தலைமை ஒருங்கிணைப்பு அதிகாரி*

2

## திறக்கப்பட்டன திரையரங்குகள்

*கொழும்பு, ஜன. 1*

*கடுமையான சுகாதார மற்றும் பாதுகாப்பு வழி காட்டுதலின் கீழ் நாடு முழுவதும் உள்ள திரையரங்குகள் இன்று வெள்ளிக்கி*

2

## பெப்ரவரி மாத இறுதிக்குள் நாட்டுக்கு கொவிட் தடுப்பூசி

### *முயற்சிகள் ஆரம்பம் என்கிறார் ஜனாதிபதியின் ஆலோசகர்*

கொழும்பு, ஜன.1

பெப்ரவரி மாத இறுதிக்கு முன்பாக கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என

2

## சிசுவின் சடலம் மீட்பு பேர்த்தியார் கைது

*யாழ்ப்பாணம், ஜன. 1*

*அரியாலையில் பெண் சிசு உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் சிசுவின் பேர்த்தியார் கைது செய்யப்பட்டுள்ளார். அந்தச் சிசு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது என கூறப்படுகின்றது.*

*24 வயதுடைய திருமணமாகாத இளம் பெண் ஒருவர் குருதிப்*

2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி....

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு கடந்த வருடம் சில தடுப்பூசிகள் கண்டு பிடிக்கப்பட்டு மக்களுக்குச் சோதிக்கப் பட்டன. சில லட்சம் பேருக்கு அந்தத் தடுப்பூசி கள் வழங்கப்பட்டுள்ளன. பிரிட் டனின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகமும் தடுப்பூசியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரம் காட்டியது. இந்த நிலையில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தடுப்பூசி முழுமையாக வெற்றிபெற்றுள் ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதை மக்களுக்குச் செலுத்தவும் அனும திக்கப்பட்டுள்ளது. (ஒ,ம)



## திறக்கப்பட்டன...

ழுமை முதல் மீண்டும் திறக்கப்பட்டன. ஆனா லும், தனிமைப்படுத்தப் பட்ட பகுதிகளிலுள்ள திரையரங்குகள் மீண்டும் திறக்க அனுமதிக்கப்ப டவில்லை.

அனைத்து திரையரங்கு களும் கிருமி நீக்க நட வடிக்கைக்கு உட்படுத் தப்பட்டுள்ளதுடன், சுகா தார வழிகாட்டுதல் களை அனைத்து பார் வையார்களும் பின்பற்ற வேண்டும் என்று அறிவு றுத்தல் விடுக்கப்பட் டுள்ளது. (ஒ,இ)

## படுகொலை,....

ளும் தயாராகி வருகின்றனவே என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரை மையப்படுத்தியே மேற்படி கேள்வி எழுப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பாதுகாப்பு செயலர், 2009 ஆம் ஆண்டு முதல் எமது இராணுவத்துக்கு எதிராக இவ்வா றான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. நாம் படுகொலைகளில் ஈடுபட்ட இராணுவம் கிடை யாது. போர்க் குற்றங்களையும் இழைக்கவில்லை. மனி தாபிமான நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவமா கும். எமக்கு எந்தவொரு அச்சமும் இல்லை, என்றார்.

**ஆயுதம் ஏந்த இடமளியோம்**

அதேவேளை, பிரிவினைவாதத்துக்கும், அடிப்படை வாதத்துக்கும் ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது. இளைஞர்கள் ஆயுதம் ஏந்தக்கூடும் என அண்மையில் கருத்துகள் வெளியிடப்பட்டன. அவ்வாறானதொரு நிலைமை உருவாவதற்கு இடமளிக்கமாட்டோம். ஒரு காலத்தில் வேலுபிள்ளை பிரபாகரன் என்பவர் இருந்தார். அவரும் ஆயுதம் ஏந்தி நாட்டு மக்களை இல்லாதொழிக்க முற்பட்டார். ஆனால் திட்டம் எடுபடவில்லை. ஆகவே, தீவிரவாதம், பயங்கரவாதம், கடும்போக்குவாதம் ஆகியவற்றை பின்பற்றுபவர்களின் திட்டம் நிறைவேறுவதற்கு இடமளிக்கப்படாது. அதனை தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும், என்றும் பாதுகாப்பு செயலாளர் கூறினார். (ஒ,44)

## சிசுவின் சடலம்...

போக்குக் காரணமாக யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டார். மருத்துவப் பரிசோதனையில் அந்தப் பெண் குழந்தை பிரசவித்துள்ளார் என்பது கண்டறி யப்பட்டு, சட்ட மருத்துவ அதிகா ரிக்கு அந்த விடயம் அறிவிக்கப் பட்டுள்ளது.

அந்தப் பெண்ணின் வீட்டுக்கு நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியும், திடீர் இறப்பு விசா ரணை அதிகாரி ந.பிறேம்குமாரும் பொலிஸாருடன் சென்று விசார ணைகளை மேற்கொண்டனர்.

விசாரணைகளின் அடிப்படையில் அந்த வீட்டின் வளாகத்தில் புதைக் கப்பட்டிருந்த நிலையில் பெண் சிசுவின் உடல் ஒன்று மீட்கப்பட் டது.

சிசுவின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு முன்னெடுக்கப் பட்டது. அது கொலை செய்யப் பட்ட பின்னரே புதைக்கப்பட்டி ருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

சிசுவின் தாயாரான இளம் பெண் தனக்கு குழந்தை பிறந்தமை தெரி யாது என்று ஆரம்ப விசாரணையில் தெரிவித்த நிலையில் அந்த இளம் பெண்ணின் தாயாரிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்டது. அதனைய டுத்து இளம் பெண்ணின் தாயார் இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட் டார். (ஒ,26)

## கல்வித்துறைக்குள்ளும்...

படையின் எயார் மார்சல் சுதர்சன பத்திரன தெரிவித்துள்ளார்.

ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களை கற்பிப்பதற்காக விமானப்படையினரை ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விமானப்படையின் எயார் மார்சல் சுதர்சன பத்திரன முன்வைத்த யோசனைக்கு கல்வி அமைச்சு இணக்கம் வெளியிட்டுள்ளது. முதலாவதாக வவுனியா வில் பின்தங்கிய பாடசாலைகளில் குறித்த பாடங்களை கற்பிப்பதற்காக விமானப்படை யினர் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்ப டுகின்றது. ஏனைய பிரதேசங்களிலும் பின்தங் கிய பாடசாலைகளுக்கு விமானப் படையி னரை ஈடுபடுத்துவதற்கு அவதானம் செலுத் தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செய லர் கபில பெரேரா தெரிவித்துள்ளார். (ஒ,இ)

## கொரோனா....

களின் புதிய நியமனங்கள் மாவட்ட ரீதியான தனிமைப்படுத்தல் மையங்களை சீராக நடத்து வதற்கும், தனிமைப்படுத்துவதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் தனி நபர்களின் போக்கு வரத்து, மருத்துவம், உபகரணங்கள், உலர் உணவு மற்றும் பிற அத்தியாவசிய பொருள்கள் மற்றும் பிற தொழில்நுட்ப தேவைகள் என்ப வற்றை சீராக முன்னெடுப்பதற்காகும்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத் துக்கு மேஜர் ஜெனரல் பண்டார, கிளிநொச்சி மாவட்டத்துக்கு மேஜர் ஜெனரல் கொட்டுவே கொட, முல்லைத்தீவுக்கு மேஜர் ஜெனரல் ரத்நாயக்க, வவுனியாவுக்கு மேஜர் ஜெனரல் பெரேரா, மன்னாருக்கு மேஜர் ஜெனரல் பண்டாரவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ,இ)

## தோழர் மணியுடன்....

தோழர் மணிவண்ணனின் உடன் வந்த காடையர்கள் கூட்டத்திலிருந்தவர்கள் மது போதையில் பேசக்கூடாத வார்த்தைகளில் பேசியுள்ளனர். இதை பெண்ணியம் பேசும், இந்தக் குழுவை ஆதரிக்கும் பெண்ணியல்வாதி கள் ஏற்கப் போகின்றார்களா? இவ்வாறு கேள்வி எழுப்பி யுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்டஆ லோசகர் க.சுகாஸ்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்த தாவது:

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெறக்கூடாது என்று மறைமுகமான நிகழ்ச்சி நிரலில் தோழர் மணிவண்ணன் செயற்பட்டார்.

கஜேந்திரகுமாரின் செயற்பாடுகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்திவிடும் என்பதால் த.தே.ம.முன்னணியை பலவீனப்படுத்த இந்த பதவி நாட கத்தை சுதந்திரக் கட்சி, டக்ளஸ் தேவானந்தா ஆகியோ ரோடு இணைந்து மணிவண்ணன் நிகழ்த்தியுள்ளார். மேர்வின் சில்வா புரிந்த கீழ்த்தரமான அரசியலை எமது தேசத்திலும் புரிய முற்படுகின்றனர். சிலரது கனவு மேயர் கனவு. எமது கனவு தேசக் கனவு. மக்கள் இதனை புரிந்து கொள்வார்கள்.

எமது இளையோரை யாழ்ப்பாண மண்ணில் யார் காணா மல் ஆக்கினார்களோ, காணாமல் ஆக்கப்பட்டவர்க ளுக்கு எந்தக் கட்சி பொறுப்புக் கூறவேண்டுமோ அவர்க ளோடு இணைந்து தோழர்மணிவண்ணன் மேயராகி விட்டு புத்தாண்டு வாழ்த்து செய்தியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோருவதை என்னவென்று சொல்வது?

டக்ளஸ் தேவானந்தாவோடு மேற்கொள்ளப்பட்ட டீலிங்கில் இது பற்றி ஏதும் பேசப்பட்டதா? இரட்டை வேடம் போடவேண்டாம். நீலிக்கண்ணீர் வடிக்கவேண் டாம். திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவது தொடர்பில் திலீபனை நாடாளுமன்றில் கொச்சைப்படுத்திய டக்ள ஸுடன் இணைந்து ஆட்சி அமைத்துவிட்டு திலீபனை அஞ்சலித்து கபடநாடகம் போடவேண்டாம்.

மணிவண்ணனுக்கு ஆதரவு வழங்கிய உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வெளியேற்றப்படுவர். தூயநகரம் தூய கரம் என்று போட்டியிட்ட மணிவண்ணன் கடந்த ஆட்சியில் ஊழல் செய்த ஈ.பி.டி.பியினருக்கு எதிராக நடவடிக்கை எடுப் பாரா? டக்ளஸின் அனுமதி இன்றி மணிவண்ணனால் யாழ். மாநகர சபைக்கு தும்புத் தடியைக்கூட வாங்க முடியாது. மணிவண்ணன் தற்போது சுமந்திரன் போல் குதர்க்கமாக பேசுகிறார். மணிவண்ணன் டக்ளஸின் கைப்பாவையாக இருக்கிறார். மேலும், மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் நாம் தீர்மானிக்கவில்லை. தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின் அதுபற்றி தீர்மானிப்போம், என்றார். (ஒ,26)

## கோமாளித்தனமாக....

சுகாஸ் தெரிவித்த குற்றச் சாட்டை, கோமாளித்தனமான கருத்து என்று குறிப்பிட்ட மணிவண்ணன் அதற்குப் பதிலளிக்க விரும்பவில்லை என்றார். யாழ். ஊடக அமையத்தில் இன்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த இருவர் மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அதனால் அவர்கள் இருவரையும் எமது அணிக்குள் உள்வாங்கவில்லை. ஒருவர் மணல் கொள்ளையில் ஈடு பட்டதாக பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நபர். மற்றையவர் மாநகர சபையில் வேலை பெற்றுத் தரலாம் என்று கூறி பலரிடம் பணம் பெற்று மோசடியில் ஈடுபட் டவர் என்று எனக்கு வாய் மொழி மூல முறைப்பாடுகள் கிடைக்க பெற்றுள்ளன. சந்தேகநபர் மாநகர சபை பணத்தை கையாடல் செய்யாமையால் என்னால் முதல் வர் எனும் ரீதியில் நடவடிக்கை எடுக்க முடியாது. ஆனாலும் பாதிக்கப்பட்டவர்கள் சட்ட நடவடிக்கை எடுக்க தயாராக இருந்தால், சட்டத்தரணி எனும் ரீதியில் நிச்சயமாக அவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க தயாராக உள்ளேன், என்றார். (ஒ,26)

## பெப்ரவரி மாத.....

ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்தார். கொரோனாத் தடுப்பூசி குறித்து விரிவான பரிசீலனையின் பின்னர் சம்பந்தப்பட்ட நாடுகள் மற்றும் நாட்டின் சுகாதா ரத்துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தேவை யான வழிமுறைகளை ஏற்படுத்தும் அதிகாரம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அது சார்ந்த ஆரம்ப கட்ட நடவடிக் கைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ள தடுப்பூசி எதுவென இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. ஏனைய நாடுகள் தடுப்பூசியை அனுமதிக்கும் முறைமையைக் கவனத்தில் கொண்டு தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ற-இ)








2021ம் ஆண்டு புத்தாண்டை வரவேற்கும் முகமாக நல்லூர் கந்தசுவாமி ஆலய தேரடியில் நள்ளிரவு 12 மணிக்கு தீபங்கள் ஏற்றப்பட்டன.

படங்கள் - ஐ.சிவசாந்தன்



# படைப்புழுத் தாக்கம்; விவசாயிகள் விசனம்





மட்டக்களப்பு, ஜன.1

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் 738 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட சோளன் பயிர்கள் படைப்புழுத் தாக்கத்தின் பரவல் காரணமாக முற்றுமுழு தாக அழிவடைந்த நிலையில் உள்ளன என விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

குறிப்பாக மதுரங்கேணிக்குளம், குஞ்சன்குளம், கிரிமிச்சை உட்பட்ட பல பிரதேசங்களில் தற்போது சோளம் செய்கை பண்ணப்பட்டு வந்த நிலையில் அவை குடலைப்பருவமாக வரும் போதே படைப்புழுக்களின் தாக்கம் மற்றும் வளர்ந்து வந்த சோளம் குலைகள் படைப்புழுக்களால் அழிக்கப்பட்டு சோளம் நெட்டிகள் மாத்திரம் மட்டுமே காணப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பாக அதிகாரிகள் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என மக்கள் கவலை தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக படைப்புழுக்களின் தாக்கம் ஏற்பட்டு வரும் பட்சத்தில் பாதிக்கப்படும் மக்களுக்கு இழப்பீடு வழங்கி உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ரி5-150)

# கிளிநொச்சியில் வீடுகள் கையளிப்பு



கிளிநொச்சி,ஜன 1

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் கிராமத்துக்கு ஒரு வீடு என்ற அடிப்படையில் அமைக்கப்பட்ட நான்கு வீடுகள் நேற்று பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஊரியான், .கல்மடு நகர் ,தருமபுரம் கிழக்கு மற்றும் புன்னை நீராவி ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்ட வீடுகளே இவ்வாறு கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலாளர் ஸ்ரீபிருந்தாகரன், மாவட்ட வீடமைப்பு அதிகாரசபை முகாமையாளர் சுபாஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-6)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

சாவகச்சேரி ஜன.1


வரணி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி மருந்து இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் ஏற்றப்படும் என சாவகச்சேரி சுகாதார பகுதியினர் அறிவித்துள்ளனர். தடுப்பூசி மருந்து ஏற்றும் நிலையங்கள் தொடர்பாக ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படும் எனவும், அந்த நிலையங்களில் தமது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றிக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வாரம் எழுதுமட்டுவாள் மற்றும் கொடிகாமம் பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து வழங்கப்பட்ட போது தவறவிட்டவர்கள் வரணிப் பிரிவில் தமது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை ஏற்றிக் கொள்ள முடியும் என மேலும் தெரிவித்தனர். (ரி5-9)

# மட்டு. மாவட்டச் செயலகத்தில் அன்டிஜென் பரிசோதனைகள்

மட்டக்களப்பு, ஜன.1

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் 72 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என



அம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்ததையடுத்து, அரச திணைக்களங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் உட்பட பொதுமக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் இடங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் எழுந்தமானமாக அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந)



கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தைச் சேர்ந்த 20 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கபட்டன.தாய்த் தமிழ் பேரவையின் ஏற்பாட்டில் மறைந்த முருகுப்பிள்ளை தம்பையாவின் 10 ஆம் ஆண்டு நினைவாக அவரது குடும்பத்தினரால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-222)

## சு.கவின் யோசனைக்கு சஜித் அணி போர்க்கொடி!

கொழும்பு, ஜன. 1

மாகாணசபை தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள யோசனைக்கு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறும்வரை பழைய மாகாண சபைகளை நிறுவி முன்னாள் உறுப்பினர்களை இயங்கு நிலைக்கு கொண்டுவர வேண்டும் என்ற யோசனையை அரசிடம் முன்வைப்பதற்கு சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் இந்த யோசனை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு என்னவென்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்னவிடம் வினவியபோது அவர் கூறியவை வருமாறு,

தேர்தல் என்பது அரசியல்வாதிகளுக்கு பதவிகளை வழங்குவதற்காக நடத்தப்படுவது அல்ல. மாறாக மக்களின் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்தி, மக்களின் இறைமைக்காகவே அது நடத்தப்படுகின்றது.

எனவே, தேர்தலை எந்நேரமும் எதிர்கொள்வதற்கு நாம் தயார். ஆனால் தேர்தல் என்ற போர்வையில் பதவிகளை வழங்கும் திட்டத்தை ஏற்கத்தயாரில்லை, என்றார். (ஓ,44)

உதயன் மீதான வழக்கு

# தமிழ்த் தேசிய இனத்துக்கு விடுக்கப்பட்டுள்ள சவால்!!!

### முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஆண்டிஐயா புவனேஸ்வரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன. 1

உதயன் பத்திரிகை மீது அரச தரப்பால் தொடுக்கப்பட்ட வழக்கென்பது, தமிழ் தேசிய இனத்துக்கு விடுக்கப்பட்டுள்ள சவால் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆண்டிஐயா புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒளிப்படத்தை பிரசுரித்தமைக்காக உதயன் பத்திரிகை மீது தொடுக்கப்பட்ட வழக்கு தமிழ் ஊடகத் துறைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாக மட்டும் பார்க்க முடியாது. இது தமிழ் தேசிய இனத்தை ஒடுக்குவதற்கான நடவடிக்கையாகவே பார்க்கவேண்டும். வடக்குக் கிழக்கு பிராந்தியத்தில் போர் உச்சம்பெற்ற காலத்திலிருந்து உதயன் தனது ஊடக சேவையூடாக தமிழ் மக்களின் குரலாக ஓங்கி ஒலிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாத இலங்கையின் கடந்த கால அரசுகளும், உதயன் ஊடகத்தை இல்லா தொழிக்க பல தடவைகள் முயன்று தோல்வியடைந்த பின், தற்போதைய அரசு சட்ட நடவடிக்கை என்ற பெயரில் உதயனின் குரலை நசுக்கிவிட நினைக்கின்றது. இந் நடவடிக்கையானது தமிழ்த் தேசிய இனத்துக்கு விடுக்கப்பட்ட சவாலாகக் கருதவேண்டும், என்றுள்ளது. (ஒ,246)

## 1000 தேசிய பாடசாலைகள்; வேலைத் திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஜன.1

சகல வசதிகளுடன் கூடிய ஆயிரம் தேசிய பாடசாலைகளை அமைக்கும் வேலைத்திட்டத்தின் ஆரம்ப வைபவம் கோட்டை ஸ்ரீ ஜயவர்தனபுர கல்லூரியில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது அமைச்சர் உரையாற்றுகையில்,

ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ், ஆயிரம் தேசிய பாடசாலைகளை அமைக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பல கட்டங்களாக இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும். முதலாம் கட்டத்தில் 123 பாடசாலைகளும், இரண்டாம் கட்டத்தில் 673 பாடசாலைகளும் தேசிய பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்படும். மாணவர்களுக்கு முழுமையான கல்வியை வழங்கும் வகையில் கணினி தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், மொழிக்கல்வி உள்ளிட்ட வசதிகள் விருத்தி செய்யப்பட வேண்டும் அவர் தெரிவித்தார். (வ-இ)

## திரையரங்குகளுக்கு கட்டண சலுகை நீடிப்பு

கொழும்பு, ஜன.1

கொரோனா வைரஸ் காரணமாக மின்சாரக் கட்டணங்களைச் செலுத்தத் தாமதமாகிய திரையரங்கு உரிமையாளர்களுக்கு சலுகைக் காலம் வழங்கப்படும் என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இதன்படி, 2020 மார்ச் முதல் இன்று வரை மின்சாரக் கட்டணத்தை செலுத்தாத திரையரங்கு உரிமையாளர்களுக்கு 2021 டிசெம்பர் வரை சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தவணைகளில் பணத்தை செலுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார். தேசிய திரைப்படக் கழகத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட 194 திரையரங்குகளுக்கு இந்தச் சலுகை வழங்கப்படவுள்ளது. (ற-இ)



## அடக்கம் தொடர்பில் இணக்கம் இல்லை

### நிபுணர்கள் குழுக்கள் வெளியேற்றம்

கொழும்பு, ஜன.1

கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லீம்களின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதியளிப்பதா என்பதை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுக்கள் இரண்டும் அது தொடர்பில் எவ்வித இணக்கமும் இன்றி வெளியேறியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் ஆராய சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியால் ஒரு நிபுணர் குழுவும் கொவிட் நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னான்டோபுள்ளேவால் ஒரு குழுவும் நிய மிக்கப்பட்டிருந்தன.

இந்த விடயம் தொடர்பில் முடிவொன்றை எட்டுவதற்காக சுகாதார அமைச்சர் தலைமையில் இந்தக் குழுக்கள் ஒன்று கூடின. இருப்பினும் இது தொடர்பில் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வரமுடியாமல் அவை வெளியேறின. (வ-இ)

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜன.1

மோட்டார் சைக்கிளில் ஹெரோய்ன் போதைப் பொருளைக் கடத்திய நபரொருவர் அம்பலாங்கொடை, பெல்வெல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 1.6 கிலோ கிராம் ஹேரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (வ-இ)

## உருமாறிய கொரோனா: பரிசோதனை ஆரம்பம்

கொழும்பு, ஜன.1

உலக நாடுகள் பலவற்றில் தற்போது பரவிவரும் உருமாறிய கொரோனா வைரஸ் இலங்கையிலும் பரவியுள்ளதா என்பதைக் கண்டறிவதில் விசேட பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் மூலக்கூறு, மருத்துவம் மற்றும் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவு இந்தப் பரிசோதனையை ஆரம்பித்துள்ளது.

இதன் பணிப்பாளர் இது தொடர்பில் தெரிவித்ததாவது,

நாட்டில் மேற்கொள்ளப்படும் பொதுவான பி.சி.ஆர் பரிசோதனையில் இந்த உருமாறிய வைரஸ் அடங்கக்கூடிய தொற்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இருப்பினும் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களுக்கு உலகம் முழுவதிலும் பரவிவரும் இந்த உருமாறிய கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதா? என்பதை கண்டறிவதற்கு தனியான விசேட மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதுதொடர்பில் பொதுமக்கள் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை. இருப்பினும், பொதுவான பி.சி.ஆர் பரிசோதனையில் இதனை வேறுபடுத்தி அடையாளம் காண முடியாதுஎன்றார். (ற-இ)

# முட்டை விலை குறைப்பு!!

கொழும்பு, ஜன.1

முட்டை உற்பத்தி அதிகரித்துள்ளதால் அதன் மொத்த விற்பனை விலை 12 ரூபாவாகக் குறைக்கப்படும். என முட்டை உற்பத்தி சங்கத்தின் தலைவர் சரத் அதநாயக்க தெரிவித்தார். தற்போது சந்தையில் முட்டையின் மொத்த விலை 14 ரூபாவாக உள்ளது. இவ்வாரம் மொத்த விலை 12 ரூபாவாக குறைக்கப்படும். நாளொன்றுக்கு முட்டை உற்பத்தி 70 இலட்சமாக காணப்பட்டது. தற்போதைய உற்பத்தி 85 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முட்டையின் சில்லறை விலையையும் குறைக்க பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (ற-இ)

# அடிப்படை வசதியின்றி ஆனைவிழுந்தான் அ.த.க.

## நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோர் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.1

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் அ.த.க.பாடசாலை அடிப்படை வசதிகளின்றி இயங்கி வருகின்றது என்று பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாடசாலை ஆரம்பப் பாடசாலையாக உள்ள போதிலும் மாணவர்களுக்கான அடிப்படை வசதிகளுடன் தற்போது இயங்கவில்லை. ஆகவே பாடசாலை மாணவர்கள் மகிழ்வான கற்றலில் ஈடுபடுவதற்கான வளங்களை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை உருவாக்க வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை கிராமம் உருவாக்கப்பட்ட நாளில் இருந்து கிராமத்துக்கான பஸ் சேவைகள் இடம் பெறாததன் காரணமாக ஒரு கிலோ மீற்றருக்கு அதிகமான தூரம் மக்களும், மாணவர்களும் நடந்து சென்றே பஸ்களில் பயணிக்க வேண்டியுள்ளது. இக் கிராமத்திலுள்ள மாணவர்கள் இடைநிலை, உயர்தர வகுப்புகளில் கல்வி கற்பதற்கு அக்கராயன் மகா வித்தியாலயம் மற்றும் கிளிநொச்சி நகரத்துக்குச் செல்ல வேண்டியுள்ளதால் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் ஆனைவிழுந்தான் பாடசாலை வரை சேவையில் ஈடுபட வேண்டும் என இக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (ற-ரி2)

## புதிய கட்சிகளுக்கான பதிவுகள் விரைவில்

கொழும்பு, ஜன.1

இந்த மாதம் முதல் புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான புதிய வரையறைகளை நிர்ணயித்து வர்த்தமானியில் பிரசுரிப்பதற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளது என தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புன்சிஹேவா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடலின் பின்னர் கருத்துதெரிவித்தபோதே அவர் மேற்படி தெரிவித்துள்ளார்.

மேலும், அடுத்த ஆண்டு மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறுமாக இருந்தால் அதற்காக நான்காயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படும். எதிர்வரும் ஜனவரி 11ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதே தினத்தில் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுடன் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (ந-இ)



## சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.1

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ணவுக்கும் தீவக சிவில் சமூகத்தினருக்கும் இடையிலான சந்திப்பு காங்கேசன்துறையில் அமைந்துள்ள வடக்கு மாகாண பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்றது .

இதில் தீவக சிவில் சமூகம் சார்பில் அதன் செயலாளரான தீவக கோட்ட குரு முதல்வர் அருட்தந்தை ம .டேவிட் , உபதலைவர் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் மா.இளம்பிறையன், பொருளாளர் க. குணாளன் , உப செயலாளர் ச.பரமேஸ்வரன், நிர்வாக குழு உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், கருணாகரன் நாவலன் , அபிராஜ்,சதீஷ் மற்றும் மண்டைதீவு பிள்ளையார் கோயில் குருக்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர் . (ச)



## அடையாள அட்டையைப் போன்று முகக்கவசம் இப்போது முக்கியம்

கொழும்பு, ஜன.1

யுத்த காலத்தில் எமக்கு தேசிய அடையாள அட்டை எவ்வளவு முக்கியமாக இருந்ததோ, தற்போது அதைவிட முக்கியமானது முகக்கவசம் என கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அ.லதாகரன் தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மக்கள் வெளியில் செல்லும்போது தங்களது முகக் கவசங்களை சரியான முறையில் அணிந்து செல்ல வேண்டும். பலர் தங்களது தாடையின் கீழ் முகக்கவசத்தை அணிந்து செல்வதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

உடம்பில் இருக்கின்ற கண், மூக்கு, வாய் ஆகிய மூன்று பகுதிகள் கொரோனாக் கிருமி நுழையக்கூடிய பகுதிகளாக இருக்கின்றன. ஆகவே நாங்கள் முகக்கவசத்தை சரியான முறையில் அணிய வேண்டும். தனிநபர் இடைவெளிகளை நாங்கள் கடைப்பிடிக்க வேண்டும் . இரண்டு நபர்கள் சேர்ந்து கதைக்கும்போது, கண்டிப்பாக சமூக இடைவெளிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் - என்றார். (ற-இ)

## மட்டு. பேராலயத்தில் புதுவருட ஆராதனை!



கொழும்பு, ஜன.1

கொரோனா அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் புதுவருடப் பிறப்பை வரவேற்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பேராலயமாக வுள்ள மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் நள்ளிரவு ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன.

சுகாதார நடைமுறைகளைப் பேணியவாறு மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்கள் அனுமதிக்கப்பட்டு இந்த வழிபாடுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட பேராயர் அருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் விசேட கூட்டுத்திருப்பலி ஆலயத்தின் பங்குத்தந்தை அன்னதாஸ் அடிகளார் மற்றும் அருட்தந்தையர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதன்போது கொரோனா அச்சுறுத்தலில் இருந்து நாட்டு மக்களை பாதுகாக்கவும், கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் அதில் இருந்து விரைவில் மீளவும், நாட்டில் நீடித்த அமைதியும் மகிழ்ச்சியும் நிலவவும் வேண்டி விசேட பிரார்த்தனை நடத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து அனைவருக்கும் ஆயர் மற்றும் அருட்தந்தையர்களால் அருளாசி வழங்கப்பட்டது. (ற-இ)



வறுமைக் கோட்டுக்குட்பட்ட கிளிநொச்சி, விசுவமடு, மல்லாவி ஆகிய இடங்களைச் சேர்ந்த ஐந்து மாணவர்களுக்கு ஜீவ ஊற்று அன்பின் கரம் ஊடாக கடந்த திங்கட்கிழமை துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. (ரி5-222)

## கொரோனா நிலையத்திலிருந்து தப்பிச் சென்ற கைதிகளுள் ஒருவர் மடக்கிப் பிடிப்பு

பொலநறுவை, ஜன.1

இன்று அதிகாலை பொலநறுவை கல்லேல்ல கொரோனா சிகிச்சை மத்திய நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் தப்பிச் சென்ற கைதிகளுள் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

குறித்த கைதி மாதம்பே பிரதேசத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளாரென, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும் ஏனைய நான்கு கைதிகளைத் தேடும் நடவடிக்கைகளை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து ஆரம்பித்துள்ளனர்.

நீர்கொழும்பு சிறையில் இருந்தே இந்த 5 கைதிகளும் கல்லேல்ல பிரதேச சிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் எனவும் தெரிவித்துள்ளார். (ந-இ)

# சொந்த வாகனமே போதும் மணிவண்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயருக்குரிய வாகனம் தனக்குத் தேவையில்லை என்றும், தன்னிடமுள்ள சொந்த வாகனத்தையே பயன்படுத்துகிறேன் என புதிய மேயராகத் தெரிவு செய்யப்பட்ட விஸ்வலிங்கம் மணிவண்ணன், யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளரிடம் கூறியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

முன்னதாக தனது சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும் தனக்கான சம்பளத்தை மக்களின் பொது நலத் திட்டங்களுக்கே பயன்படுத்த உள்ளேன் எனவும் அறிவித்திருந்த யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் தற்போது மேயருக்கான சொகுசு ரக வாகனத்தையும் தான் பயன்படுத்தப்போவதில்லை என்று அறிவித்துள்ளார். (ஓ,20)

## சுவாச விடுதிக்கு தற்காலிக பூட்டு!

மாத்தளை, ஜன.1

மாத்தளை வைத்தியசாலையின் சுவாச நோய் விடுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

சுவாச நோய் விடுதியில் இரண்டு பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மாத்தளை வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் பிரசாந்த் ஜயசுந்தர குறிப்பிட்டார்.

அடையாளம் காணப்பட்ட இரண்டு கொரோனாத் தொற்றாளர்களும் தெல்தெனிய கொரோனாச் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்த நோயாளர்களுடன் நெருங்கி பழகிய 4 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ற-இ)

## விருந்துக்கு சென்றவர் சடலமாக மீட்பு

ஹற்றன், ஜன.1

புதுவருட விருந்துக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார் என ஹற்றன் பொலிஸார் தெரிவித்தார்.

புது வருடத்தை முன்னிட்டு சக நண்பர்களோடு மதுபான விருந்துக்கு நேற்றிரவு வீட்டிலிருந்து சென்றவர் வீடு திரும்பாமையால் தேடியபோதே தேயிலை மலையில் இறந்த நிலையில் அவர் மீட்கப்பட்டார் என அவரது மனைவி தெரிவித்துள்ளார். (வ-இ)





கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் கடந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய 37 மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் நேற்று வியாழக்கிழமை வழகப்பட்டன. (ரி5-222)

## மஹர சிறைச்சாலை கலவரம் : அறிக்கை எதிர்வரும் திங்களன்று

கொழும்பு, ஜன.1

மஹர சிறைச்சாலை கலவரம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய குழுவின் அறிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ளது.

நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் கையளிக்கப்பட்டுள்ள மேற்படி அறிக்கையில் 13 பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அமைச்சரவையில் குறித்த அறிக்கை முன்வைக்கப்பட்டதன் பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-இ)



## 24 மணி நேரத்தில் 157 பேர் கைது!!



கொழும்பு, ஜன.1

இலங்கையில் கடந்த 24 மணி நேரத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 157 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் டிசெம்பர் 20 முதல் இன்று வரையான காலப்பகுதியில் ஆயிரத்து 571 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டிசெம்பர் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சிறப்புப் போக்குவரத்து நடவடிக்கைகள் ஜனவரி 5 ஆம் திகதி வரை தொடரும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ற-இ)





திருகோணமலை நகரசபையில் அரச சேவை உத்தியோகத்தர்கள் நகரசபையின் தலைவர் நா. இராசநாயகம் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (ரி5-40)

## சுகாதார சேவைப் பணியாளர்கள் அர்ப்பணிப்புடன் திகழ வேண்டும்

அம்பாறை, ஜன.1

நாட்டில் சுகாதார சேவை மக்களுக்கான முக்கிய சேவையாகத்திகழும் நிலையில், சுகாதார சேவை சார்ந்தவர்களின் பணிகள் அர்ப்பணிப்பு, மற்றும் சேவை மனப்பாங்குகொண்ட தன்னலமற்ற சேவையாக அமைய வேண்டும். இவ்வாறு நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லீமா பஷீர் தெரிவித்துள்ளார்.

புதிய வருடத்துக்கான அரச சேவை உறுதியுரையுடனான சத்தியப் பிரமாண நிகழ்வு இன்று, நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இன்று மக்களுக்கான மிக முக்கிய சேவையாகத்திகழும் சுகாதார சேவையை முன்னெடுக்கும் நாம் எவ்விதபிரதிபலனை நோக்காகக்கொள்ளாது தன்னலமற்ற, மனப்பக்குவத்துடனான சேவைகளை ஆற்ற வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவல் மட்டுமன்றி டெங்கு பரவலும் ஏற்பட்டு வரும் இக்காலகட்டத்தில், இவற்றிலிருந்து பிரதேச மக்களைப் பாதுகாப்பதற்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும் நமது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட சகல பணியாளர்களையும் பாராட்ட நாம் கடமைப்பட்டுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். (ந-30,40)





2021 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு இன்று காலை யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், 2 நிமிட மௌன அஞ்சலி மற்றும் சத்தியப்பிரமாணம் என்பன இம்பெற்றன. நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் சிறப்புரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-20)

## மழைக்கு சாத்தியம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சில இடங்களில் 50 மி.மீக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (வ-இ)

# பஸ் சேவையின் குறைகள் நிவர்த்தி செய்யப்படும்

### போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.1

தூர இடங்களுக்கான பஸ் சேவை இன்று முதல் ஆரம்பமாகுமென தெரிவித்திருந்தாலும், குறித்த சேவைகள் உரிய முறையில் ஆரம்பிக்கப்படவில்லை என, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றால் தனியார் பஸ் உரிமையாளர்கள் தமது பயண சேவையை மட்டுப்படுத்தியுள்ளமை காரணமாக, சில வீதிகளில் குறைந்தளவு பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன. எனினும் இந்தக் குறையை இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் மூலம் நிவர்த்தி செய்வதே அரசாங்கத்தின் எண்ணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

### பிரதேச சபை தவிசாளர்

## கட்சியிலிருந்து இடைநிறுத்தம்

கண்டி, ஜன.1

அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளர் கதிர்ச்செல்வன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என கட்சியின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் அறிவித்துள்ளார்.

பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட பிறகு அதன் முடிவு வெளிவரும் வரை, தன்னை தனிமைப்படுத்திக்கொள்ளாது, தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி பல பொது நிகழ்வுகளில் பங்குபற்றினார் என கதிர்ச்செல்வன் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அதன் அடிப்படையிலேயே அவர் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என ஜீவன் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார். (ந-இ)



## பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு

பண்டத்தரிப்பு,ஜன.1

பண்டத்தரிப்பு சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலையில் 65 வருடங்களுக்கு பின்னர், முதன் முறையாக புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

எம்.ஜி. இராமச்சந்திரனின் 33 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு வடபிரதேச எம்.ஜி.ஆர் முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த நிகழ்வு நடைபெற்றது. பரீட்சையில் சித்தியடைந்த சி.பிருந்தா - 167 புள்ளிகள், சு.நிருஷா - (165 புள்ளிகள்), இ.ஹேனுசா - (162 புள்ளிகள்) ஆகிய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். பழைய மாணவன் த.சர்வானந்தன் மேற்படி மாணவர்களின் பெயர்களில் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வைப்புச் செய்து புத்தகங்களை வழங்கினார்.பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த 12 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஆர்பிகோ காப்புறுதி நிறுவன முகாமையாளர் எம்.சசிதரன் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அ.நிரோஜன், வட பிரதேச எம்.ஜி.ஆர் கழகத்தின் பிரதேச தலைவர் எஸ்.கஜீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)







புத்தாண்டை முன்னிட்டு ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் நடைபெற்றன. பக்தர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர். (ரி5)

# சமூக வலைத்தளங்களில் போலியான செய்திகள்

### எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அஜித் ரோஹண கோரிக்கை

கொழும்பு, ஜன.1

சமூக வலைத்தளங்கள் மற்றும் அலைபேசிகள் ஊடாக வெளிவரும் போலியான செய்திகளை நம்பி மக்கள் ஏமாறாமல் எச்சரிக்கையுடன் இருக்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையில் நைஜீரிய நாட்டவர்கள் இவ்வாறான மோசடி வேலைகளில் ஈடுபட்டுள்ள நிலையில், இதுவரை 24 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பண மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் எனவும் நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ந-இ)

# உலக அளவில் புத்தாண்டுக் கொண்டாட்டம்!


மொஸ்கோ



இந்தியா



எகிப்து


வியட்நாம்



அமெரிக்கா


இங்கிலாந்து

புத்தாண்டுக் கொண்டாட்டம் உலக அளவில் நேற்று முன்தினம் கோலாகலமாக இடம்பெற்றது.

உலகின் பல்வேறுபட்ட தலைநகர்கள் மற்றும் வர்த்தக நகரங்களில் வாணவேடிக்கைகள் மற்றும் கலை நிகழ்வுகளுடன் இரவிரவாக இந்தக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. (ம)


வடகொரியா


ஏதென்ஸ்


துபாய்



ஜேர்மனி


சீனா



# அஸ்வின் புதிய சாதனை!

புதுடில்லி, ஜன.1

டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தியக் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரான ரவிச்சந்திரன் அஸ்வின் புதிய சாதனையொன்றை பதிவுசெய்துள்ளார்.

அஸ்வின் அதிக இடது கை துடுப்பாட்ட வீரர்களை ஆட்டமிழக்கச் செய்த பந்து வீச்சாளராக தனது பெயரை பதிவுசெய்துள்ளார். மெல்பேர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில், இரண்டாவது இன்னிங்ஸில் ஜோஷ் ஹேசில்வுட்டை ஆட்டமிழக்கச் செய்த தன் மூலம் இந்த சாதனையைப் பதிவு செய்தார்.

அஸ்வின் இதுவரை 192 இடது கை துடுப்பாட்ட வீரர்களை ஆட்டமிழக்கச் செய்துள்ளார். அஸ்வின் 73 டெஸ்ட் போட்டிகளில் 375 இலக்குகளை வீழ்த்தியுள்ளார்.(ற-இ)

# ஆஸ்திரேலிய அணியில் இடம்பிடித்தார் வோர்னர்!



புதுடில்லி, ஜன.1

ஆஸ்திரேலியா இந்தியா இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகள் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி மூலம் சமநிலை பெற்றுள்ளன.

கடைசி இரண்டு போட்டிக்கான ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் வோர்னர் இடம் பிடித்துள்ளார்.

முதல் இரண்டு டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் இடம்பெறவில்லை. தற்போது காயத்தில் இருந்து வேகமாக மீண்டு வருவதால் கடைசி இரண்டு போட்டிக்கான ஆஸ்திரேலிய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-இ)

# ரகானேவின் ஆட்டம் திருப்பு முனையே!!

## ரவிசாஸ்திரி தெரிவிப்பு

புதுடில்லி, ஜன.1

முதல் இன்னிங்ஸில் ரகானே போராடி சதமடித்தது தான் இந்த டெஸ்டின் திருப்பு முனையாக அமைந்தது என இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் ரவிசாஸ்திரி தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா இந்தியா அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மெல்போர்னில் நடைபெற்றது.

4 ஆவது நாள் ஆட்டத்தில் 70 ஓட்டங்கள் இலக்கை 2 இலக்குகளை மட்டுமே இழந்து இந்தியா 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றி மூலம் இந்திய அணி தொடரை 11 என சமநிலைப்படுத்தியது.

விராட் கோலி, ரோகித் சர்மா, இஷாந்த் சர்மா, முகமது ஷமி ஆகிய நான்கு பேர் இல்லாமல் இந்த வெற்றி கிடைத்துள்ளது.

இந்த நிலையில், முதல் இன்னிங்ஸில் ரகானே போராடி சதமடித்தது தான் இந்த டெஸ்டின் திருப்பு முனையாக அமைந்தது என இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

முதல் இன்னிங்ஸில் ரகானே இறங்கிய போது 2 இலக்குகளை இழந்திருந்தோம். அதன்பின்னர் அவர் 6 மணிநேரம் துடுப்பாட்டத்தில் போராடினார். அதுவும் மேகமூட்டமான காலநிலையில் 6 மணி நேரம் துடுப்பாட்டத்துக்கு கவனம் செலுத்துவது கடினமான தொன்று. அவரது இன்னிங்ஸ் தான் (112 ஓட்டங்கள்) இந்த டெஸ்டில் திருப்பு முனையாகும்.

முதல் டெஸ்டில் படுதோல்வியை சந்தித்த பின்னர் வலுவாக மீண்டெழுந்து வெற்றி பெற்றமை, இந்தியக் கிரிக்கெட்டில் மட்டும் அல்ல, உலக கிரிக்கெட் அரங்கில் மிகச்சிறந்த சாதனைகளில் ஒன்றாகும் என்றார்.(றஇ)

# ஹைதராபாத்தை வீழ்த்தி கோவா அணி வெற்றி!!

புதுடில்லி, ஜன.1

இந்தியன் சூப்பர் லீக் கால்பந்துப் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் ஹைதராபாத்தை வீழ்த்தி கோவா அணி 4 ஆவது வெற்றியைப் பதிவு செய்தது. 7 ஆவது இந்தியன் சூப்பர் லீக் கால்பந்துப் போட்டித் தொடர் கோவாவில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடந்த 43 ஆவது லீக் ஆட்டத்தில் கோவாஹைதராபாத் அணிகள் மோதின. இதில் ஹைதராபாத் அணி வீரர் அரிடேனே 58 ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார்.

ஆனால் கடைசி நிமிடங்களில் கோவா அணி 2 கோல் அடித்து வெற்றி பெற்றது. அந்த அணி வீரர்கள் இஷான் பன்டிட்டா 87 ஆவது நிமிடத்திலும், இகோர் அங்குலோ 91 ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். கோவா அணி பெற்ற 4 ஆவது வெற்றி இதுவாகும். அந்த அணி 14 புள்ளியுடன் 3 ஆவது இடத்தில் உள்ளது.(ற-இ)




# நடராஜன் உள்ளே

மெல்போர்ன், ஜன.1

ஆஸ்திரேலியா அணிக்கெதிரான இறுதி இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இருந்து இந்தியக் கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ் விலகியுள்ளார். அவருக்கு பதிலாக தமிழகத்தைச் சேர்ந்த நடராஜன் மற்றும் வேகப்பந்து வீச்சாளரான ஷர்துல் தாகூர் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்கு ஷர்துல் தாகூரை, இந்திய அணி நிர்வாகம் பரிந்துரைக்க வாய்ப்பு உள்ளது என்று கூறப்படுகின்றது.

நடராஜன் தற்போது ஆஸ்திரேலியாவில் இந்திய அணிக்கு வலைப்பயிற்சியில் பந்துவீசி வருகிறார். பெரும்பாலும் அவருக்கும் வாய்ப்பு வழங்கப்படலாம்.

நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், இதுவரை இரண்டு போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றுள்ளன. இரு அணி களுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் ஜனவரி 7ஆம் திகதி சிட்னி மைதானத்திலும் இறுதி டெஸ்ட் ஆட்டம் ஜனவரி 15ஆம் திகதி பிரிஸ்பேன் மைதானத்திலும் நடைபெறவுள்ளது. (ற-இ)

# கொள்ளை கும்பலை...

னர்.இன்று அதிகாலை ஒரு மணியளவில் விடத்தற்பளையிலுள்ள வீடொன்றைக் கொள்ளையிடும் முயற்சியுடன் 5பேர் கொண்ட கும்பல் சென்றுள்ளது. வாள்கள், பொல்லுகளுடன் சென்ற அவர்கள் வீடை உடைக்க முயற்சித்துள்ளனர். வீட்டிலிருந்தவர்கள் அபயக் குரல் எழுப்பினர். தொலைபேசி ஊடாக அயலவர்களுக்கும் தெரியப்படுத்தினர். ஊரவர்கள் திரண்டனர்.

5பேர் கொண்ட கும்பலில் ஒருவரை ஊரவர்கள் மடக்கினர். ஏனைய 4 பேரும் தப்பித்துச் சென்றனர். ஊரவர்களில் ஒருவரான சிவராசா நிரோசன் (வயது 35) என்பவர் கும்பலின் வாள்வெட்டில் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஊரவர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டவர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஓ,159)